# உயிர்முறைமைகளுக்குப் பொருத்தமான வானிலை நிபந்தனைகள்



## தேர்ச்சி மட்டம் 1.1 உயிர்முறைகள் மீது செல்வாக்குச் செலுத்தும் காலநிலைக் காரணிகள்

### வானிலை

நாட்டின் குறிப்பிட்டதொரு பிரதேசத்தில் வளிமண்டலத்தில் குறுகிய காலத்துள் காணப்படும் தன்மையாகும். அதாவது மழைவீழ்ச்சி, வெப்பநிலை, வளி அமுக்கம், காற்றின் வேகம், திசை, வளியில் காணப்படும் நீராவியின் அளவு மற்றும் சூரிய கதிர்ப்பின் தன்மை.

### காலநிலை

நீண்ட காலத்துள் ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் காணப்பட்ட காலநிலைத் தரவுகளைக் கற்றாய்ந்து அதன் மூலம் தெரிவிக்கப்படும் யாதேனும் பிரதேசத்தில் காணப்படும் வானிலை நிலைமைகளின் நீண்டகால சராசரி சூழல் தன்மையாகும்.

### உயிர் முறைமைகளில் காலநிலை காரணிகளின் செல்வாக்கு




தொகுப்பு : திரு.பி.நிரோஜனன் - ஆசிரியர் (வட மாகாணம்)
கணினி வடிவமைப்பு : திரு.க.குகதாசன் ஆசிரியர் - த.தொ.தொ (கிளி/புனித பற்றிமா றோ.க.த.க பாடசாலை, உருத்திரபுரம்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## மழைவீழ்ச்சி

முகில்களிலிருந்து 1-5mm க்கு இடைப்பட்ட அளவுடைய நீர்த்துணிக்கைகள் நிலத்தில் வீழ்தல் மழைவீழ்ச்சி எனப்படும்.

- பருவக்காற்று மழை - தென்மேல், வடகீழ்ப்பருவக் காற்று மழைகள்
- மேற்காவுகைச் செயன்முறை - மேற்காவுகை மழை
- சூறாவளி மழை



## தென்மேல் பருவ மழை

- தென்மேல் பருவக் காற்றின் செல்வாக்கு காரணமாகக் கிடைக்கும் மழை
- மே மாதம் மூன்றாவது வாரம் தொடக்கம் ஆகஸ்ட் மாதம் இறுதி அல்லது
- செப்ரம்பர் முதலாவது வாரம் வரையில் இம்மழை கிடைக்கும்
- தீவின் தென்மேற் பிரதேசத்துக்குக் கூடுதலான அளவு மழை கிடைக்கும்
- தீவின் கிழக்கு, வட மத்திய பிரதேசங்களில் உலர்வான - சூடான காற்று வீசும்
- சிறுபோகப் பயிர்ச்செய்கைக்குத் தேவையான நீர் இம்மழையின் மூலம் கிடைக்கும்.

## வடகீழ்ப் பருவ மழை

- வட கீழ்ப்பருவக் காற்றின் செல்வாக்குக் காரணமாக இம்மழை கிடைக்கும்
- நவம்பர் மூன்றாவது வாரம் தொடக்கம் பெப்ரவரி வரையில் மழை கிடைக்கும்
- நாட்டின், வடகீழ்ப் பிரதேசம் உட்பட பல பிரதேசங்களுக்கு மழை கிடைக்கும்
- கிடைக்கும் மழையின் அளவும் செறிவும் குறைவானது
- பெரும்போகப் பயிர்செய்கைக்குத் தேவையான நீர் இம்மழை மூலம் கிடைக்கும்.

## மேற்காவுகை மழை

- பருவக் காற்றுக் காலங்கள் இரண்டுக்கு இடையே கிடைப்பதால் இடைப்பருவக்காற்று மழை எனவும் வழங்கப்படும்.
- மார்ச் - ஏப்ரல் - முதலாம் இடைப்பருவக்காற்று மழை
- ஒக்டோபர் - நவம்பர் - இரண்டாம் இடைப்பருவக்காற்று மழை




Copyright www.e-thaksalawa.moe.gov.lk

- இக்காலப் பகுதியில் காலை முதல் நண்பகல் வரையில் முகில்களற்ற நீலநிறமான வானம் காணப்படும்.
- இக்காலத்துள், அதிக சூரியக் கதிர்ப்பு காரணமாக கீழ் வாயுப்படைகள் உறுதி குறைவடைந்து மேலே செல்லல்.
- நாட்டின் உட்பிரதேசங்களில் சுயாதீனமான மேற்காவுகை ஓட்டங்கள் உருவாகி, வளியோட்டம் மேலே செல்லல்
- நாட்டின் உட்பிரதேச உயர் நிலங்களில் இருண்ட திரண் மழை முகில்கள் உருவாதல்
- பிற்பகல் 2.00 மணியளவில் மலைப் பிரதேசங்களின் மழை பொழிதல்
- மாலை வேளைகளில் கரையோரப் பிரதேசங்களில் மழை பொழிதல்
- இரவில் வானம் முகில்களற்றுத் தெளிந்து காணப்படும்.

## சூறாவளி மழை

- வளிமண்டலத்தில் உருவாகும் தாழமுக்கம் காரணமாகச் சூறைக்காற்று மழை ஏற்படும்.
- வேகமான காற்றும், 2 - 3 நாட்கள் வரை நீடிக்கும் மழையும் இதன் சிறப்பியல்புகளாகும். பொதுவாக டிசெம்பர் மாதத்திலேயே இம்மழை கிடைக்கும்.
- இம்மழை தாவரங்களுக்கும், விலங்குகளுக்கும் பாதிப்பை ஏற்படுத்தத்தக்கதாகும்

## மழைவீழ்ச்சியின் சாதகமான செல்வாக்கு

⇒ விவசாய நடவடிக்கைகளில் அதன் செல்வாக்கு

 * மழைவீழ்ச்சிக் கோலத்திற்கமையப் பயிர்செய்தல்.

 ◊ **சிறு போகம்**

 - முதலாவது இடைப்பருவக் காற்று மழை - மார்ச் - ஏப்ரல்
 - தென்மேல் பருவக்காற்று மழை - மே - செப்டம்பர்
 - மார்ச் - ஆகஸ்ட் வரையிலான காலம் சிறுபோகம் எனப்படும்.
 - சிறுபோகத்துக்காக - முதலாவது இடைப்பருவக் காற்று மழையும், தென்மேல் பருவக்காற்று மழையும் பங்களிப்புச் செய்தல




Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

◊ **பெரும் போகம்**

- ♦இரண்டாவது இடைப்பருவக் காற்று மழை - ஒக்டோபர் - நவம்பர்
- ♦வடகீழ்ப் பருவக்காற்று மழை - டிசம்பர் - பெப்ரவரி
- ♦பெரும்போகத்துக்காக - இரண்டாவது இடைப்பருவக்காற்று மழையும் வடகீழ்ப்பருவக்காற்று மழையும் செல்வாக்குச் செலுத்தும்
- ♦பொதுவாக செப்ரெம்பர் தொடக்கம் பெப்ரவரி வரையிலான காலப்பகுதி பெரும்போகமாகும்.

* தாவர வளர்ச்சிக்கு தேவையான நீர் கிடைத்தல்
* நீர் நிலைக்கு நீர் கிடைத்தல்
* நிலத்தடி நீர் அதிகரித்தல்
* தரமான புற்கள் உற்பத்தி
* நிலத்தை பண்படுத்தல் இலகுவானது

## பிரதிகூலம்

- ♦ மண்ணரிப்பு ஏற்படும்.
- ♦ தாவரங்களும் பொறிமுறை சேதம் ஏற்படும்
- ♦ பூக்கள் மகரந்த மணிகள் கழுவிச் செல்லப்படுவதனால் விளைச்சல் குறையும்.
- ♦ விளைச்சலை உலர்த்தலில் சிரமம் ஏற்படல்.
- ♦ வெள்ளப்பெருக்கு ஏற்படல்.
- ♦ மழைவீழ்ச்சி அதிகரிப்பால் உப்பு நீரின் செறிவு குறைந்து உவர்மீன் உற்பத்தி பாதிப்படையும் .
- ♦ நோய் பரவல் கூடும்
- ♦ மழைவீழ்ச்சி குறைவால் வரட்சி ஏற்படல்.
- ♦ திறந்தவெளி வளர்ப்பு விலங்குகளுக்கு நீர் தட்டுப்பாடு ஏற்படல்.

## வெப்பநிலை

- ♦ வளியிலுள்ள சூடான குளிரான தன்மையே வெப்பநிலையாகும்.
- ♦ உலகின் வெவ்வேறு பிரதேசங்களில் வெவ்வேறுபட்ட வெப்பநிலை காணப்படும். ஒரு குறித்த நாட்டினுள்ளும் கூட, நாளாந்த வெப்பநிலை இடத்துக்கிடம் வேறுபடும்.




Copyright www.e-thaksalawa.moe.gov.lk

## வெவ்வேறு பிரதேசங்களில் சூழல் வெப்பநிலை வேறுபடுவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்

- குத்துயரம்

குத்துயரம் அதிகரிக்கும்போது சூழல் வெப்பநிலை குறைவடைதல்

உ-ம்: 1000 மீற்றரால் குத்துயரம் அதிகரிக்கும் போது சூழல் வெப்பநிலை $6.4^{0}C$ இனால் குறைவடைதல்.

- புவியியல் அமைவு

தரையில் பள்ளமான இடங்கள் உள்ளபோது அங்கு சூழல் வெப்பநிலை குறைவாக இருத்தல்

- தாவர குடித்தொகை பரம்பல்

யாதேனும் சூழலில் தாவரங்களின் குடித்தொகை அதிகரிக்கும்போது சூழல் வெப்பநிலை குறைவடையும்

- மனிதனின் செயற்பாடுகள்

நகரமயமாக்கல் போன்ற பல்வேறு மானுடச் செயற்பாடுகள் காரணமாக, சூழல் வெப்பநிலை அதி-கரித்தல்.

- உள்நாட்டு நீர்த்தேக்கங்களின் அமைவிடம்

பாரிய நீர்நிலைகளால் ஏற்படுத்தப்படும் தாங்கல் (Buffer) செயற்பாடு காரணமாக சுற்றுப்புற வெப்பநிலை குறைவடைதல்

- மழைவீழ்ச்சிப் பரம்பல்

மழைவீழ்ச்சிப் பரம்பல் உயர்வான பிரதேசங்களில் சூழல் வெப்பநிலை குறைவடைதல்

## வெப்பநிலையால் ஏற்படும் அனுகூலம்

- தண்டுத்துண்டங்களின் வேர்விடல் தூண்டப்படல்.
- விளைச்சல்களை உலர்த்தல்.
- வித்து முளைத்தல், சுவாசம், ஆவியுயிர்ப்பு, ஒளித் தொகுப்பு, பூத்தல் என்பவற்றில் செல்வாக்குச் செலுத்தல்.




Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## வெப்பநிலையால் ஏற்படும் பிரதிகூலம்

- விலங்குகளின் இனப்பெருக்க வளம் குறைவடைதல்
- இலிங்க முதிர்ச்சி தாமத மடைதல்
- காளைகளின் சுக்கிலத்தின் தரம் குறைவடைதல்
- வேட்கை காலம் குறைதல் Øபால், முட்டை உற்பத்தி குறைதல்
- அதிக வெப்பநிலை காரணமாக பண்ணை விலங்குகளின் உணவு உட்கொள்ளும் வீதம் குறைவடை-யும்
- உவர் மீன்களின் குடித் தொகை குறையும்
- நோய், பீடை தாக்கம் அதிகரிக்கும்
- உணவு பழுதடைதல்
- அதிக வெப்பநிலையால் சில அங்கிகள் அழிதல்
- மகரந்தமணி உலர்வால் விளைச்சல் குறைதல்

## காற்று

### அனுகூலம்

⇒ மிதமான காற்று மகரந்த சேர்க்கைக்கு உதவுதல்

⇒ சூழலில் வெப்பநிலை மூலம் ஏற்படும் பாதிப்பு இழிவாக்கப்படும்

⇒ ஆவியுயிர்ப்பிலும் ஒளித் தொகுப்பிலும் செல்வாக்கு செலுத்துதல்

⇒ பயிர்விளைச்சலை தூய்மை ப்படுத்த உதவும்

⇒ பயிர் விளைச்சல்களை உலர்த்த உதவும்

⇒ மழை உருவாதலில் பங்களிப்பு செய்தல்



### பிரதி கூலம்

⇒ தாவரங்களிற்கு பொறிமுறை சேதத்தை ஏற்படுத்தல்

⇒ தூவல் நீர்பாசனத்தில் பாதிப்பு ஏற்படுத்தல் கடற்தொழிலுக்கு பாதிப்பு ஏற்படுத்தல்

⇒ நோய் பீடைகள் பரவுதல்

⇒ பூக்கள், பிஞ்சுகள் உதிர்வதால் கனிகொள்ளல் பாதிப்படைதல்

⇒ பயிர் விளைச்சல் குறை வடைதல்

⇒ நீர்நிலைகளில் கலங்கற் தன்மை ஏற்படுதல்

⇒ பண்ணை விலங்குகளில் நடத்தை மாற்றம் ஏற்படல்





Copyright www.e-thaksalawa.moe.gov.lk

# ஒளி

## அனுகூலம்

- ⇒ ஒளித்தொகுப்பில் பங்களிப்பு செய்தல்
- ⇒ நிறப்பொருட்களின் தொகுப்பில் பங்களிப்பு செய்தல்
- ⇒ பூக்கள் உருவாதலில் பங்களிப்பு செய்தல்
- ⇒ விளைச்சல்களை உலர்த்தல்

## பிரதி கூலம்

- ⇒ அதிகசூரிய ஒளிக்கு திறந்து வைக்கப்பட்டுள்ள உணவுகளின் தரம் பாதிக்கப்படும்
- ⇒ உணவிலுள்ள போசனை பதார்த்தங்களில் மாற்றம் ஏற்படல்

# சாரீரப்பதன்

## அனுகூலம்

- ⇒ தண்டு துண்டங்களை வேர் கொள்ள செய்வதற்கு அவசியம்
- ⇒ நீர்பாசன கால அளவை தீர்மானித்தல்
- ⇒ அந்தூரியம், ஓர்க்கிட் போன்ற மலர்களின் தரத்தை பேணுதல்
- ⇒ மகரந்தமணிகள் உலர்வதை தடுத்தல்
- ⇒ மரக்கறி, பழங்களின் புதுத் தன்மை பேணுதல்
- ⇒ மகரந்த சேர்க்கைக்கு உதவுதல்

## பிரதி கூலம்

- ⇒ நோய் பீடைகள் வளர்ச்சியடைவதும், பரம்பலடைவதும் அதிகரிக்கும்
- ⇒ நுண்ணங்கி செயற்பாடு காரணமாக உணவு விரைவில் பழுதடைதல்
- ⇒ பயிர் விளைச்சல் குறைவடைதல்
- ⇒ விலங்குகளின் உற்பத்தி குறைவடைதல்
- ⇒ வளிமண்டல சாரீரப்பதன் அதிகரிக்கும் போது பழங்களின் சுவை குறையும்
- ⇒ விளைச்சல்களை நீண்டகாலம் பேணி வைத்திருக்க முடியாது.


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk